017

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - 2023/2024

மட்டம் - 04

**LLU4707-- குடும்பச் சட்டம்**

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - I

காலம் : ஒரு (01) மணித்தியாலம்

திகதி : 06.11.2024 நேரம்: மு.ப.09.30 - மு.ப.10.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02).
ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. இருபத்தேழு (27) வயதுடைய அருண் என்பவனும் இருபத்தைந்து (25) வயதுடைய மேரி என்பவளும் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுபவர்கள் என்பதுடன் 2022ஆம் ஆண்டின் மே மாதம் முதல் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ்கின்றனர். அவர்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கு முன்னர் தமது ஒன்றிணைந்த வாழ்வை பதிவு செய்யவில்லை என்பதுடன் வழக்காற்று சம்பிரதாயங்களையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் இவர்கள் உறவினர்களாலும் நண்பர்களாலும் திருமணமான தம்பதியினராக இனங்காணப்பட்டனர். 2023 நவம்பரில் அருண் சாந்தினி எனும் பதினாறு (16) வயதுடையவளுடன் காதல் உறவு ஒன்றை ஆரம்பித்தான். பின்னர் சாந்தினியை திருமணம் செய்வதற்கு தீர்மானித்த அருண், அவளுடைய பெற்றோரின் சம்மதத்தை இதன் பொருட்டு கோரினான். அருணின் மேரியுடனான உறவை அறியாத சாந்தினியின் பெற்றோர்கள் திருமணத்திற்கு தமது சம்மதத்தை தெரிவித்தனர். சாந்தினியின் பெற்றோர்கள் 2024 டிசம்பரில் ஒரு மிகப்பெரும் வழக்காற்றுத் திருமணத்தை அருணுக்கும் சாந்தினிக்கும் செய்து வைக்க திட்டமிட்டனர். எவ்வாறாயினும் 2024 ஒக்டோபரில் மேரி, அருண் ஆனவன் சாந்தினியை திருமணம் செய்ய திட்டமிட்டு இருப்பதை அறிந்ததுடன், அவன் சட்டபூர்வமாக தன்னை மணந்துள்ளதாக கோரி இத்திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறாள்.

   மேலுள்ள சந்தர்ப்பத்தை கருத்திற்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்குக.

   (அ) மேரிக்கும் அருணுக்கும் இடையில் சட்டபூர்வமான வலிதான திருமணம் ஒன்று காணப்படுகிறதா? உமது விடையை நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

   (06 புள்ளிகள்)

   (ஆ) அருண் மற்றும் சாந்தினி ஆகியோருக்கு இடையில் திட்டமிடப்பட்டுள்ள திருமணத்தின் சட்ட வலிதுடைமையை ஆராய்க.

   (06 புள்ளிகள்)

(இ) இச்சகல திறத்தவரும் முஸ்லீம் சட்டத்தார் ஆளப்பட்டு இருப்பின் மேலுள்ள (அ) மற்றும் (ஆ) இற்கான விடைகள் வேறுபடுமா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

**(08** புள்ளிகள்)

2. கீழ் தரப்பட்டுள்ள வழக்குகளில் ஏதேனும் நான்கின் (04) மீது குறிப்புகள் எழுதுக. ஒவ்வொரு வழக்கும் அவற்றின் தீர்ப்புக்களில் ஆராயப்பட்ட பிற முக்கிய வழக்குகளதும், நியதிச்சட்ட உறுப்புரைகளதும் ஆராய்வை உள்ளடக்க வேண்டும்.

(அ) *Abeysundere v Abeysundere [1998] 1 Sri L.R. 185*

(ஆ) *Gunarathnam v Registar General [2002] 2 Sri L.R. 302*

(இ) *Canekeratne v Canekeratne [1968]71 NLR 522*

(ஈ) *Gaffoor v Wilson and Another [1990] 1 SRI L.R 142*

(உ) *Gracia Catherine v Wijegunawardene [1986] Sri L.R.190 – (Supreme Court Judgement)*

**(05X04 = 20** புள்ளிகள்)

- பதிப்புரிமை பெற்றது -